மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண்.40/2021

பெயர் – முருகேசன் (பி.வா.சா.1)

நாள் – 29.01.2024

பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 11ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு கையெழுத்து போட தெரியும். ஒரே மாதிரி தான் கையொப்பம் செய்வேன். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் தற்போது அமெரிக்காரவில் உள்ள் என் மகள் பெயரில் உள்ள பெட்ரோல் பங்கை நான் கவனித்து வருகிறேன். எவ்வளவு காலமாக எனது மகளின் பெட்ரோல் பங்கை நான் கவனித்து வருகிறேன் என்றால் 2012ம் வருடம் பெட்ரோல் பங்கை என் மகள் ஆரம்பித்த காலத்திலிருந்து நானும், எனது மகன் மு.கார்த்திகேயன் கவனித்து வருகிறேன். எனது மகள் எப்போது அமெரிக்கா சென்றாள் என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை. அமெரிக்கா சென்றுவிட்டு என் மகள் அவ்வப்போது சாத்தூருக்கு வருவாரா என்றால் வருவார். நிரூபண வாக்குமூலம் மற்றும் எதிர்வழக்குரையில் உள்ள விபரங்களை நான் தான் எனது வழக்கறிஞருக்கு சொன்னேன் என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ எனது மகளின் பெட்ரோல் பங்கை நானும், எனது மகனும் கவனித்து வருகிறேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நிரூபண உறுதிக்கூற்று, வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் எதிர்வழக்குரையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.3 ஆவணமான முழு சம்மத ஒப்பந்த பத்திரம், எதிர்வழக்குரை, நிரூபண உறுதிக்கூற்று மற்றும் பி.வா.சா.ஆ.1 ஆன வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவற்றில் உள்ள என்னுடைய கையொப்பங்கள் வெ்வெறாக உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது அல்ல. நான் கையொப்பம் செய்யவில்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றாலும் வழக்கிற்காக இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தற்போதிலிருந்து ஏழு வருட காலமாக தெரியும். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வா.சா.ஆ.1 ஆவணப்படி 10 லட்சம் கொடுத்து தாவா

சொத்தில் உள்ள கடையை அவர் நடத்தி வருவதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தில் உள்ள கடையை நடத்தி வந்தார் என்றால் 01.02.2020 லிருந்து 18.04.2021 வரை நடத்தி வந்தார். 18.04.2021 ம் தேதி எந்த நேரத்தில் சாவியை ஒப்படைத்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்ன காரணத்திற்காக வாதி கடையை ஒப்படைத்தார் என்றால் என்னுடைய இடத்தில் செட் அமைத்ததால் ஆக்கிரமிப்பு செய்யகூடாது என்று நான் சொன்னேன். வாதி ஒரு நான்கு ஐந்து பேருடன் சேர்ந்து என்னுடன் பிரச்சினை செய்தார்கள். ஏற்கனவே நான் காவல் நிலையத்தில் புகார் செய்திருந்ததால் கடையை நீயே வைத்துக்கொள்ள என்று சாவியை என் மேல் ஏறிந்து சென்றுவிட்டார். வாதி பிரச்சினை செய்ததாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. 18.04.2021 ம் தேதி அன்று தான் அந்த பிரச்சினை நடந்தது என்றால் சரிதான். பிரச்சினை செய்துவிட்டு என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதி வச்சகாரப்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். என் மீதும், என் மகன் மீதும் குற்ற எண்.77/2021 வழக்கு தாக்கல் செய்தார்கள். அன்றைய தினம் தென்காசி அரசு மருத்துவமனையில் நான் அனுமதிக்கப்பட்டேன் என்றால் சரிதான். அதிகாலை 5, 6 மணிக்கு அனுமதிக்கப்பட்டோம். அந்த வழக்கில் நான் முன்பிணை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கவனித்து வரும் என் மகளின் பெட்ரோல் பங்க்கு அருகில் எத்தனை கடைகள் உள்ளன என்றால் ஒரு கடை உள்ளது. உணவு சம்மந்தப்பட்ட கடைகள் நடத்தும் போது உணவு பாதுகாப்பு அதிகாரி வந்து பார்வையிட்டு சான்று வழங்கிய பிறகு தான் கடை நடத்த முடியும் என்றால் சரிதான். சான்று பெற்றவர் மட்டுமே கடையை நடத்த முடியும் என்றால் சரிதான். வாதி தனது மனைவி பெயரில் உணவு பாதுகாப்பு அதிகாரியிடம் சான்றிதழ் பெற்று வா.சா.ஆ.2 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அந்த பதிவு சான்றிதழில் உள்ள எண் எனது பெயரில் உள்ள கோகுலம் கபெக்கானது ஆகும். ஆனால் வாதி என் பெயரில் உள்ள பதிவெண்ணை பயன்படுத்தி போலியாக வா.சா.ஆ.2 ஆவணத்தை பெற்றுள்ளார். அதனால் வா.சா.ஆ.2 ஆவணத்தை ரத்து செய்துவிட்டார்கள். தற்போது வா.சா.ஆ.2 ஆவணம் அமலில் இல்லை. அவ்வாறு வா.சா.ஆ.2 ஆவணம் ரத்து செய்யப்பட்டதாக ஆவணங்கள் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.2

ஆவணம் ரத்து செய்யப்பட்டதாக நான் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே வா.சா.ஆ.2 ஆவணம் ரத்து செய்யப்பட்டிருந்தால் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு இல்லாத காரணத்தினால் தான் நான் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றாலும், வா.சா.ஆ.2 ஆவணம் ரத்து செய்யப்பட்டதாக ஆவணம் தாக்கல் செய்தால் எனது வழக்கு விரோதமாகிவிடும் என்பதால் தான் நான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு சொந்தமாக வீடு உள்ளன என்றாலும், நான் வீடு வாடகைக்கு விட்டுள்ளேன் என்றாலும் சரிதான். நான் வாடகைக்கு விடும் கட்டிடங்களுக்கான அட்வான்ஸ் தொகை பெறுவது வழக்கமா என்றால் அட்வான்ஸ் வாங்குவேன் சிலசமயங்களில் அட்வான்ஸ் வாங்காமலும் விடுவேன். (பிரதிவாதி தரப்புவழக்கறிஞரின் ஆட்சேபணையோடு இந்த கேள்வி கேட்கப்பட்டது. ஆட்சேபணைக்கான காரணமானது எதிர்வழக்குரையில் சொல்லப்படவில்லை என்பதாகும்). தாவா சொத்திற்கு நான் வாடகை பெற்றேன் என்றால் சில நாட்கள் கொரோனா காலத்தில் வாடகை கொடுக்கவில்லை. அதற்கு பிறகு வாடகை கொடுத்தார் என்றால் சரிதான். அதற்காக ஒரு டைரியில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். நான் கொரோனா காலத்திலும் வாதியிடமிருந்து வாடகை பெற்றேன் என்றால் சரியல்ல. அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை வாதி விற்பனை செய்ததாக கடந்த 2021ம் ஆண்டு மார்ச் மாதத்தில் மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த மனு மீது, வாதி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் இல்லை. விசாரணை செய்தார்கள். வாதி என்னிடம் ரூ.10 லட்சத்தை அட்வான்ஸாக கொடுத்துதான் தாவா கடையை நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. அந்த டீக்கடை அருகே ஒரு ேஹாட்டல் கடையை நடத்தி வந்தார் என்றால் சரிதான். ஆனால் அது எங்களுடைய இடத்தில் நடத்தவில்லை. அந்த கடையை காலி செய்துவிட்டார். 18.04.2021ம் தேதி நடந்த சம்பவத்திற்கு பின்னிட்டு அதிலிருந்த பொருட்களை யார் எடுத்து சென்றார்கள் என்றால் வாதி தான் எடுத்து சென்றார். இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது வாதி கடையை காலி செய்துவிட்டார் என்றால் 18.04.2021ம் தேதியே கடையை காலி செய்துவிட்டு. தற்போது

தாவா சொத்தில் வாதி எந்த கடையும் நடத்தவில்லை என்றால் சரிதான். என்னுடைய பொருட்களை போட்டு வைத்துள்ளேன். எனது மகளுக்கு பாத்தியப்பட்ட பிராது சொத்தில் வாதி ரூ.10 லட்சம் அட்வான்ஸ் கொடுத்தும் வாடகை ரூ.500 வீதம் தினமும் செலுத்தியும் கடையை நடத்த அனுமதித்துவிட்டு கடந்த 18.04.2021ம் தேதி வாதியையும், வாதியின் கடையில் வேலை பார்த்து கொண்டிருந்த ஆட்களையும் அடியாட்கள் வைத்து அடித்து நெருக்கிவிட்டேன் என்றாலும், அதனை வாதி என்னிடம் கேட்டதற்கு, கடையில் நல்ல லாபகரமான முறையில் நடந்து வருவதால் எனது தங்கை கிருஷ்ணவேணிக்கு கடை வேண்டும் என்று வாதியை அடித்துவிரட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. வாதியிடமிருந்து ரூ.10 லட்சத்தை பெற்றுக்கொண்டு அதற்காக வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் கையொப்பம் செய்து பிறப்பித்து கொடுத்துவிட்டு, வழக்கிற்காக பொய்யாக வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் பிறப்பித்து கொடுக்கவில்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தில் தற்போது வரை கடை நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. என் மகளுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை பொறுத்து நான் மோசடியாக வா.சா.ஆ.1 ஆவணத்தை பிறப்பித்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நாளது தேதி வரை வாதி நடத்தி வரும் தாவா கடையை நான் நாளது தேதி வரை வாதி அனுபவம் செய்து வருவதை நாளது தேதி வரை இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் அரசியல் பிரமுகரா என்றால் இல்லை. நான் வேறு தொழில் செய்கிறேனா என்றால் முன்பு ரியல்எஸ்டேட் தொழில் செய்து வந்தேன். வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியானது என்று நான் சொல்லியுள்ள நிலையில் அது எனக்கு எப்போது தெரியவந்தவது என்றால் 06.03.2021ம் தேதில் வச்சகாரப்பட்டி காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடந்த போது தெரியவந்தது. வா.சா.ஆ.1ல் உள்ள ஆவணத்தில் உள்ள கையொப்பம் மோசடியானது என்பதை நிரூபணம் செய்வதற்காக நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு மட்டும் அனுப்பியுள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் வாதியிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு கையெழுத்து செய்து வா.சா.ஆ.1 ஆவணத்தை பிறப்பித்து கொடுத்ததால் தான் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ள சாட்சிகள் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதி உண்மையிலேயே சரியான அட்வான்ஸ் தொகை

கொடுத்தும், வாடகையை சரியான முறையில் கொடுத்தும், அமைதியான முறையில் தற்போது வரை கடை நடத்தியும் வருவதை, எனது அரசியல் மற்றும் ஆள் பலத்தை வைத்து தற்போது வரை இடையூறு செய்து வருவதாக சொல்லுவது சரியல்ல. நான் வாதியிடம் வாங்கிய அட்வான்ஸ் தொகை ரூ.10 லட்சத்தை திருப்பி கொடுத்தால் வாதி கடையை காலி செய்து கொடுக்க தயாராக உள்ளார் என்றால் நான் பணம் வாங்கவில்லை என்பதால் திருப்பி கொடுக்க தேவையில்லை. வாதியிடம் பெற்ற அட்வான்ஸ் தொகையான ரூ.10 லட்சத்தை வாதி வசம் கொடுக்ககூடாது என்பதற்காக வாதிக்கு இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.